பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 28 புதன்கிழமை 12.03.2025 கதிர் 124

## இது ரகசியம் அல்ல!

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான கட்டுப்பணத்தைச் செலுத்தி வேட்புமனுக்களை கட்சிகள் பெறத் தொடங்கிவிட்டன. தமிழ் கட்சிகளில் ☞ 2

# ‘பாலியல் மோசம்’ குற்றச்சாட்டில் வைத்தியசாலை ஊழியர் கைது

தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை ஊழியர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றார். வைத்தியசாலையின் மனநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுவரும் யுவதி ஒருவரை திருமணம் செய்வார் என்று ஏமாற்றி பாலியல் உறவு வைத்தார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

சந்தேகநபரானதுப்புரவு ஊழியரை தெல்லிப்பளைப் பொலிஸார் நேற்றுக் கைது செய்தனர். பாதிக்கப்பட்ட பெண் கொடுத்த முறைப்பாட்டைத் தொடர்ந்து அவர் யாழ். போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரியின் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட பெண்ணைக் காதலிக்கிறார் என்றும் திருமணம் செய்துகொள்வார் என்றும் சந்தேகநபர் தெரிவித்ததை அடுத்து, அவர்கள் இருவருக்கும் இடையில் வைத்தியசாலை வளாகத்திலேயே பாலியல் உறவு இடம்பெற்றதாக குற்றச்சாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் தனக்கு ஏற்கனவே திருமணமாகி இருப்பதையும் குழந்தைகள் இருப்பதையும் மறைத்துத் தன்னை ஏமாற்றினார் என்று தெரிந்துகொண்டதை அடுத்து பாதிக்கப்பட்ட பெண் பொறுப்பு மருத்துவரிடம் இது குறித்-து முறைப்பாடு செய்துள்ளார். அதையடுத்து பொலிஸில் முறையிடப்பட்டு சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

### தேடப்பட்டுவரும் தேசபந்து தென்னக்கோன்

# தானாக வெளிவரும் வரை காத்திருப்பது நோக்கமல்ல

### அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தானாக வெளியே வரும்வரை காத்திருப்பது எமது நோக்கமல்ல. கூடியவிரைவில் அவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த வேண்டும் என்பதே தேவையாகும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் நேற்று அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தொடர்பான சகல தகவல்களையும் அடிப்படையாகக் கொண்டு பொலிஸார் தேடுதல்களை முன்னெடுத்துள்ளனர். தேசபந்து தென்னகோன் கைது செய்யப்படவேண்டும் என்பதே ஆளும்தரப்பின் இலக்காகும்.

தேசபந்து தென்னக்கோன் ☞ 2

### பாலியல் வன்கொடுமையைக் கண்டித்து

# மருத்துவர்கள் இன்று பணிப்புறக்கணிப்பு

### இலங்கை முழுவதும் 24 மணிநேரம் சேவை நிறுத்தம்

**அனுராதபுரம் போதனா மருத்துவமனையில் பெண் மருத்துவர் ஒருவர் கொடூரமாகப் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டதை எதிர்த்து, இன்று காலை 8:00 மணி முதல் 24 மணிநேரம் இலங்கை முழுவதும் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தை அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம் (GMOA) மற்றும் மருத்துவ நிபுணர்கள் சங்கம் (AMS) ஆகியன அறிவித்துள்ளன.**

**மருத்துவர் தனது கடமையில் இருந்தபோது இவ்வாறான கொடூரத்திற்கு உள்ளாகியமை குறித்து மருத்துவ நிபுணர்கள் சங்கம் ஆழ்ந்த கோபத்தையும் அதிர்ச்சியையும் வெளிப்படுத்தியுள்ளதுடன்** ☞ 2

### எரித்து, உடைத்து சேதமாக்கப்பட்ட

# எம்.பிக்களின் வீடுகளுக்கான இழப்பீடு விவகாரம் நீதிமன்றில்

’கோத்த கோ கம’ போராட்டத்தின் போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் வீடுகளுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு இழப்பீடு வழங்குவதில் பொது நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படுவது குறித்து முழுமையான விசாரணை நடத்தப்பட்டு, அந்தப் பணத்தைப் பொறுப்பானவர்களிடமிருந்து வசூலிக்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் ஆர்வலரும் சமூக ஆர்வலருமான சட்டத்தரணி ரவீந்திரநாத் தாபரே நேற்று இந்த அடிப்படை உரிமைகள் மனுவைத் தாக்கல் செய்தார்.

சம்பவம் நடந்த நேரத்தில் ஜனாதிபதியாக இருந்தவரான கோட்டாபய ராஜபக்ச, முன்னாள் பாதுகாப்பு அதிகாரிகள், பதில் பொலிஸ் மா அதிபர் மற்றும் முப்படைகளின் தலைவர்கள் ஆகியோர் மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

’கோட்டா கோகம’ போராட்டத்தின் போது வீடுகள் சேதமடைந்ததாகக் கூறப்படும் அமைச்சர்கள் உள்ளிட்ட 43 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இழப்பீடு எவ்வாறு வழங்கப்பட்டது என்பதையும், அந்த வகையில் பொது நிதி எவ்வாறு தவறாகப் ☞ 2

# வன்கொடுமைச் சந்தேகநபர் இராணுத்தை விட்டோடியவர்

### அமைச்சர் நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு

அனுராதபுரம் மருத்துவமனையில் பெண் மருத்துவரை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கினார் என்று சந்தேகிக்கப்படும் நபர் இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால இந்தத் தகவலை நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார். சந்தேகநபரைக் கைது செய்ய ஐந்து பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

சந்தேகநபரின் இருப்பிடம் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார். எதிர்க் கட்சித் தலைவரின் கரிசனைக்குப் பதிலளித்தபோதே இதனைத் தெரிவித்தார்.

அநுராதபுரம் வைத்தியசாலையில் பெண் வைத்தியர் ஒருவர் துன்புறுத்தப்பட்டு பாலியல் துஷ்பிரயோகத்துக்கு ஆளாகியுள்ள சம்பவத்தின் மூலம் வைத்தியசாலை வளாகத்தில் பெண் வைத்தியர்களின் ☞ 8

# “குரங்குகளுக்கு அன்னதானம்” அமைச்சரின் யோசனை இது

பயிர்களைச் சேதப்படுத்தும் குரங்குகள் போன்ற விலங்குகளால் ஏற்படும் அழிவுகளைக் கட்டுப்படுத்த அவற்றுக்கு தினமும் அன்னதானம் வழங்கவேண்டும் என்று தொழிற்கல்வி துணை அமைச்சர் நலின் ஹேவகே அம்பலாங்கொடையில் தெரிவித்தார்.

பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற அம்பலாங்கொடை பிரதேச ☞ 8

### மன்னார் காற்றாலை திட்டத்திலிருந்து

# விலையை மாற்ற முடியாவிட்டால் அதானி நிறுவனம் வெளியேறலாம்

### ஆளும்தரப்பு உறுதியான நிலைப்பாடு

அதானி நிறுவனம் காற்றாலை மினசாரத்திற்கான தனது கூறுவிலையை மாற்றவேண்டும். முடியாது என்றால் அது வெளியேறலாம். இது தொடர்பான ஆளும்தரப் பின்நிலைப்பாட்டில் எந்தமாற்றமும் இல்லை. மக்களுக்கு சுமையாக அமையும் வேலைத் திட்டங்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்று அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பில் நேற்று இதனைத் தெரிவித்தார். அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

அதானி தொடர்பில் ஜனாதிபதியின் இந்தியப் பயணத்திற்கு முன்னர் இருந்த நிலைப்பாட்டில் பயணத்தின் பின்னர் ☞ 2

# மருத்துவர் சங்கம் கண்டனம்

அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் பெண் மருத்துவர் ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டதற்கு இலங்கை மருத்துவ சங்கம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் அனுராதபுரம் போதனா வைத்தியசாலைக் கிளையின் செயலாளர் வைத்தியர் சசிக விதானகே இது தொடர்பில் தெரிவித்ததாவது:

தனது பணியில் ஈடுபட்டிருந்த ஒரு பெண் மருத்துவர் மீது ☞ 2

# கான்ஸ்டபிள் கைது

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட ஒரு தொகுதி சிகரெட்டுகளுடன், கிராண்ட்பாஸ் காவல்துறையின் கான்ஸ்டபிள் ஒருவர், வாலானா மத்திய ஊழல் தடுப்புப் பணிக்குழுவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

அவரால் ஒரு வானில் மறைத்து ☞ 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## அமெரிக்க முன்மொழிவில்

# 30 நாள் போர் நிறுத்தத்திற்கு உக்ரைன் நேற்று இணக்கம்

ரஷ்யா- - உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவர அமெரிக்கா முன்மொழிந்த 30 நாள் போர் நிறுத்தத்திற்கு உக்ரைன் ஒப்புக்கொண்டுள்ளது.

உக்ரைன் ஆளும்தரப்பைப் பிரதிநிதித் துவப்படுத்திய குழுவிற்கும் அமெரிக்க ஆளும்தரப்புப் பிரதிநிதிகளுக்கும் இடையிலானசந்திப்புசவுதிஅரேபியாவின் ஜெட்டாவில் நேற்று நடைபெற்றது. பேச்சுக்களில் சவுதி அரச பிரதிநிதிகள் மத்தியஸ்தம் வகித்தனர்.

உக்ரேனியக் குழுவிற்கு ஆண்ட்ரி யாமெக் தலைமை தாங்கினார். அவர் உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கியின் சார்பாக உக்ரைன் ஜனாதிபதி அலுவலகத்தின் பிரதிநிதியாகப் பேச்சில் கலந்-துகொண்டார். அமெரிக்கக் குழுவிற்கு, அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் மார்கோ ரூபியோ தலைமை தாங்கினார்.

நீண்ட பேச்சுக்களுக்குப் பிறகு, அமெரிக்கா முன்மொழிந்த 30 நாள் போர்நிறுத்தத்திற்கு உக்ரைனிய பிரதிநிதிகள் ஒப்புக்கொண்டனர்.

இரண்டு வாரங்களுக்கு முன்பு, பெப்ரவரி 28, உக்ரைனின் கனிம வளங்கள் தொடர்பாக அமெரிக்காவுடன் பல டிரில்லியன் டொலர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி வெள்ளை மாளிகைக் குச் சென்றிருந்தார். அந்தச் சந்திப்பு இணக்கமற்றதாக முடிந்து உலகின் கவனத்தை ஈர்த்தது.

அந்த சம்பவத்திற்குப் பிறகு, அமெரிக் காவிற்கும் உக்ரைனுக்கும் இடையிலான உறவுகள் மோசமடைந்திருந்தன, இந்தச் சர்ச்சையால் கோபமடைந்த டிரம்ப், உக்ரைனுக்கான அமெரிக்க இராணுவ உதவிகள் அனைத்தையும் நிறுத்துமாறு ஜெலென்ஸ்கிக்கு உத்தரவிட்டார்.

இருப்பினும்அமெரிக்காவின்முடிவுக்கு மாறாக பிரான்ஸ், கிரேட் பிரிட்டன் உள்ளிட்ட மேற்கு ஐரோப்பிய நாடுகள் உக்ரைனுக்கு உதவின.

இதைத் தொடர்ந்து அமெரிக்காவின் மத்தியஸ்தத்தில் 30 நாள் போர் நிறுத்தத்திற்கு உக்ரைன் ஒப்புக்கொண்ட நிலையில், டிரம்ப் நிர்வாகம் உடனடியாக உக்ரைனுடன்உளவுத்துறைத்தகவல்களைப் பகிர்வதையும், உக்ரைனுக்கு தேவையான பாதுகாப்பு உதவிகளை மீண்டும் வழங்குவதையும் தொடங்கியுள்ளன.

'நாங்கள் மத்தியஸ்தம் செய்த போர்நிறுத்தம் மற்றும் அமைதித் திட்டத்திற்கு உக்ரைன் ஒப்புக்கொண்டது மகிழ்ச்சியளிக்கிறது. இப்போது நாங்கள் அதை ரஷ்யாவிற்கு அனுப்புகிறோம். ரஷ்யா ஒப்புக்கொண்டால் போர் நிறுத்தம் தொடங்கும். அது வெற்றி பெற்றால், போரை முற்றிலுமாக நிறுத்த முழுமையான போர்நிறுத்தத்தை நோக்கி நாம் நகர முடியும்' என்று அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் மார்கோ ரூபியோ தெரிவித்தார்.

---

## இனி இது .....

கவனிப்புக்குரியவையான தமிழ் அரசுக் கட்சி யாழ்ப்பாணத்திலும் தமிழ் காங்கிரஸ் வவுனியாவிலும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி மன்னாரிலும் ஏற்கனவே கட்டுப்பணம்செலுத்தியுள்ளன. வேட்புமனுக்கள் மார்ச் 17 முதல் தொடங்கும்.

இந்த நிலையில் ஆங்காங்கே கட்சித் தாவல்கள் தொடங்கிவிட்டன. ரெலோவின் நீண்ட கால உறுப்பினரான விந்தனும் அவரது மகனும் நேற்று தமிழ் அரசுக் கட்சியில் இணைந்துவிட்டனர். வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினரான விந்தன், யாழ்ப்பாணத்தில் ரெலோவுக்குள்ள கணிசமான செல்வாக்குக்குக் காரணமானவர்.

மற்றொரு பக்கத்தில் ஜனநாயகத் தமிழ் அரசுக் கட்சியின் பக்கத்திலிருந்து முன்னாள் பிரதேச சபைத் தலைவர் ஒருவர் தமிழ் காங்கிரஸ் பக்கம் தாவிவிட்டார் என்று கேள்வி. ஜனநாயகத் தமிழ் அரசு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் சேர்ந்து யாழ்ப்பாணத்தில் போட்டியிடுகிறது என்று ரெலோ தலைவர் சொல்லிய நிலையில், அந்தக் கட்சியின் சார்பில் அதற்கு உத்தியோகபூர்வ மறுப்பு எதுவும் தெரிவிக்கப்படாதிருப்பதால் அவர் காங்கிரஸ் பக்கம் சென்றுவிட்டார் என்று கூறப்படுகின்றது.

இதே தரப்பிலிருந்து சட்டத்தரணி தவராசா உள்ளிட்டவர்களும் தமிழ் காங்கிரஸுடன் சேர்வது குறித்து ஆர்வம் காட்டி வருகின்றார்கள். காங்கிரஸுடன் அது தொடர்பில் பேச்சு நடத்தப்பட்டு வருவதாகவும் சொல்லப்பட்டு வருகின்றது. இந்தத் தரப்பின் மற்றொரு தலைவராக நம்பப்படும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் அமெரிக்காவில் இருந்து இன்னும் நாடு திரும்பவில்லை. ஜனநாயகக் கூட்டணியோடு தான் சேரப்போவதில்லை என்று ஊடகங்களில் வெளியான தகவலையும் அவர் மறுத்திருக்கும் நிலையிலும் அவரும் அவரது ஆதரவாளர்களும் கூட்டணியோடு நிற்பார்களா என்பதும் நிச்சயமற்றதாகவே இருக்கின்றது. இருந்தாலும் சரவணபவான் தம்மோடு இருப்பார் என்றே கூட்டணியின் ஸூம் கூட்டங்களில் கருத்துக்கள் நம்பிக்கையோடு பகிரப்பட்டுள்ளன.

தமிழ் அரசுக் கட்சியிலிருந்து வெளியேறியவரான சாவகச்சேரி அருந்தவபாலன் தமிழ் காங்கிரஸுடன் சேர்வது அனேகமாக உறுதியாகிவிட்டது. அவரது ஆதரவாளர்கள் காங்கிரஸின் பட்டியலில் போட்டியிடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மற்றொரு பக்கத்தில் ரெலோவிலிருந்து மேலும் சிலரும் தமிழ் அரசுக் கட்சிப் பக்கம் தாவுவார்கள் என்றும் கதைகள் அடிபடுகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக மீண்டும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு புளொட்டும் ரெலோவும் மறுத்துவிட்ட நிலையில் சங்கு கூட்டணியில் இனி ஒருபோதும் போட்டியிடப்போவதில்லை என்று ஏற்கனவே முடிவெடுத்திருந்த ரெலோ உறுப்பினர்கள், முக்கியஸ்தர்கள் தமிழ் அரசுக் கட்சிக்கு வருவார்கள் என்று தெரிகிறது. ஜனநாயகக் கூட்டணிக்குள் இருக்கும் கட்சிகள் ஒரு கட்சியிலிருந்து வெளியேறுபவர்களை மற்றொரு கட்சியில் சேர்த்துக்கொள்ளக்கூடாது என்று இணக்கப்பாடு கண்டிருப்பதால் அவர்கள் கூட்டணிக்கு வெளியே தாவுவதைத் தவிர வேறு தெரிவில்லை.

இதுபோக ஜனநாயகக் கூட்டணிக்குள்ளும் விரைவில் உடைவு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. சிறீகாந்தாவின் தமிழ்த் தேசியக் கட்சி அதிலிருந்து வெளியேறும் விளிம்பில் நின்றுகொண்டிருக்கின்றது. கூட்டணிக்குள் ரெலோவுக்கும் சிறீகாந்தாவுக்கும் இடையிலான அக்கப்போர் நீண்டகாலமாகவே தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. மீனுக்கு வாலும் பாம்புக்குத் தலையும் காட்டு விலாங்குத் தனத்துடன் தமிழ்த் தேசியம் என்று தமக்கும் பிறகு ஆட்சியில் இருப்பவர்களுக்கு ஆதரவாக கொழும்பிலும் ரெலோ ஆடும் இரட்டைவேடம் சிறீகாந்தாவிற்கு நெருடலாக இருப்பதால் அவர் அதைக் கேள்விக்குட்படுத்துகிறார்.

இப்போதும் ஆளும் தரப்பின் பட்ஜெட்டை ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் கலந்தாலோசிக்காமல் ரெலோ ஆதரித்ததற்குக் காரணம் என்ன என்று கேட்டு மூன்று நாள் கால அவகாசம் கொடுத்திருக்கிறார். ரெலோ அதை மதிப்பதாக இல்லை. அதனால் சிறீகாந்தா தரப்பு கூட்டணியில் இருந்து வெளியேறி தமிழ் காங்கிரஸுடன் சேரும் அல்லது புதிய அணி ஒன்றை அமைக்கும் என்று கூறப்படுகின்றது. ஆனால், சிறீகாந்தா நீண்டகாலமாகவே கூட்டணியிலி-ருந்து வெளியேறுகிறார் என்று கூறிவந்தாலும் அதற்கான துணிவு அவருக்குக் கிடையாது என்று அவரோடு கூட உள்ளவர்களே கருத்துத் தெரிவிக்கிறார்கள் என்பதும் கவனத்திற்குரியதே!

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## மருத்துவர்கள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடுமையாகக் கண்டித்துமுள்ளது.

''இதுபோன்ற வன்முறை சுகாதாரப் பணியாளர்களுக்கு ஆபத்தை விளைவிப்பது மட்டுமல்லாமல், சுகாதார அமைப்பின் நேர்மையையும் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது'' என்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தினால் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்தக் கொடூரம் தொடர்பில் விரைவான மற்றும் பாரபட்சமற்ற விசாரணையை நடத்தப்படவேண்டும். குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்தவும், எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்களைத் தடுக்கவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

மருத்துவப் பணியாளர்களில் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. பல்கலைக்கழகங்களில் மருத்துவப் பட்டப்படிப்பைத் தொடரும் மாணவர்களில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கினராக பெண்களின் எண்ணிக்கை - அதிகரித்து வருகின்றது. எனவே பெண் மருத்துவர்களுக்கு, குறிப்பாக இரவுக் கடமைகளில் பணிபுரிபவர்களுக்கும் முதுகலை பயிற்சி பெறுபவர்களுக்கும் பாதுகாப்பான தங்குமிடங்களும் சிறந்த வசதிகளும் அவசரத் தேவையாகவுள்ளன.

மேம்பட்ட கண்காணிப்பு, மருத்துவமனைகளில் பொலிஸ் காவலை அதிகரிப்பது உள்ளிட்ட கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளை அறிமுகப்படுத்தவேண்டும் - என்றுள்ளது.

பாதிக்கப்பட்டவரின் அடையாளத்தை வெளியிடுவதைத் தவிர்ப்பதன் மூலம் அவரது தனியுரிமையை மதிக்குமாறு ஊடகங்கள் மற்றும் சமூக ஊடக பயனர்களையும் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

## கான்ஸ்டபிள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்டிருந்த 18,600 சட்டவிரோத சிகரெட்டுகளைத் தாம் கைப்பற்றி உள்ளனர் என்றும் பொலிஸார் கூறுகின்றனர்.

வாலானா மத்திய ஊழல் தடுப்புப் படையின் பணிப்பாளர் உதய குமாரவின் வழிகாட்டுதலின் கீழ், தலைமைப் பொலிஸ் பரிசோதகர் இந்திக வீரசிங்க உள்ளிட்ட அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## எம்.பிக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயன்படுத்தப்பட்டது என்பதையும் பெப்ரவரி 5 நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் சுகாதார அமைச்சரும் அமைச்சரவை செய்தித் தொடர்பாளருமான நளிந்த ஜெயதிஸ்ஸ விளக்கியிருந்தார் எனவும்,

மறுநாள் அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் இந்த விடயம் பெரியளவில் வெளிப்படுத்தப்பட்டது என்றும் மனுதாரர் ரவீந்திரநாத் தாபரே சுட்டிக்காட்டியுள்ளார். இந்த விவகாரம் தொடர்பான மேலும் விசாரணையில், அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்கும் செலுத்தப்படவேண்டிய மொத்த இழப்பீடு 2.5 மில்லியன் ரூபாய் என்பது தெரியவந்தது, ஆனால் அரசியல் செல்வாக்கு மற்றும் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதன் மூலம் அவர்கள் சட்டப்பூர்வமாக பெற வேண்டியதைவிட அதிக பணத்தைப் பெற்றிருப்பது தெரியவந்துள்ளது என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தானாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாத்திரமின்றி இன்னும் சிலர் இவ்வாறு கைது செய்யப்படவுள்ளனர். ஆனால் அவர் எங்கிருக்கின்றார் என்பது எமக்குத் தெரியாது. அவர் தொடர்பான தகவல்கள் தெரிந்தவர்கள் அவற்றைப் பொலிஸாருக்கு வழங்கவேண்டும். அது மக்களினதும் ஊடகங்களினதும் பொறுப்பாகும்.

அவர் விரைவில் கைது செய்யப்படுவார் என்று எதிர்பார்க்கின்றோம். எனினும் அவரைப் பணியிடை நிறுத்தம் செய்வது குறித்தோ கட்டாய விடுமுறையில் அனுப்புவது குறித்தோ தீர்மானிக்கவில்லை. தேசபந்து தென்னக்கோன் சரணடைவதற்கென கால அவகாசம் எதுவும் வழங்கப்படவில்லை.

அவரைக் கண்டு பிடிப்பதற்குப் பல பொலிஸ் குழுக்கள் தேடுதல் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. தேசபந்து தென்னக்கோன் வெளியில் வரும் வரை காத்திருப்பது எமது நோக்கமல்ல. முடிந்தளவு விரைவாக அவரைக் கைது செய்து, நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதே எமது தேவையாகும் - என்றார்.

## விலையை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுவது உண்மையல்ல.

நாம் முதலீடுகளை ஊக்குவிக்கின்றோம். அந்த வகையில் எமக்குப் பொருத்தமான முதலீட்டுக்கான முன்மொழிவுகளை அதானி நிறுவனம் முன்வைத்தால் அது தொடர்பில் வெளிப்படையாக பேச்சு நடத்த தயாராகவுள்ளோம்.

எவ்வாறிருப்பினும் உத்தேச காற்றாலை மின்னுற்பத்தி திட்டத்தில் மின் அலகொன்றுக்கான விலை தொடர்பில் ஆளும்தரப்புக்கு உறுதியான நிலைப்பாடொன்று உள்ளது. எனவே நாம் கூறுவதைப் போன்று அந்த விலையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டும்.

விலை திருத்தத்தை மேற்கொள்ள விரும்பினால் பேச்சு நடத்தலாம். அவ்வாறில்லை எனில் அவர்கள் விரும்பினால் திட்டத்தை இரத்து செய்து கொள்ளலாம். இதன் மூலம் ஏனைய சகல முதலீட்டாளர்களும் வெளியேறுவதாக அர்த்தமில்லை.

எந்த முதலீடானாலும் அதனால் ஏற்படக் கூடிய சுமையை மக்கள் மீது சுமத்த வேண்டியேற்பட்டால் அவ்வாறானதொரு திட்டத்தை எமது ஆளும்தரப்பு ஏற்றுக் கொள்ளமாட்டாது.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தனது இந்தியப் பயணத்தின் போது இதனை மிகத் தெளிவாக வலியுறுத்தியிருந்தார். மக்களுக்கு சாதகமான அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதே எமது இலக்கன்றி,

## மருத்துவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடந்த பாலியல் வன்கொடுமையை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம். இச்செயலை மேற்கொண்ட சந்தேகநபரை விரைவில் சட்டத்தின் முன் நிறுத்துமாறும், தொடர்புடைய சட்ட நடவடிக்கைகளை தாமதமின்றி செயல்படுத்துமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வலியுறுத்துகிறோம்.

இந்த துரதிர்ஷ்டவசமான, அருவெருக்கத்தக்க செயலுக்கு ஆளான மருத்துவரின் தனியுரிமை மற்றும் அடையாளம் பாதுகாக்கப்படவேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம். வைத்தியர்களுக்கான பணியிடங்களின் பாதுகாப்பை விரைவில் உறுதிசெய்யவேண்டும். இல்லையேல் வைத்தியர்கள் தமது பணிகளைத் தொடர்வது சவாலான விடயமாக அமையலாம். சுகாதாரப் பணியாளர்களின் பாதுகாப்பு மற்றும் நோயாளிகளின் பாதுகாப்பு ஆகிய இரண்டும் ஒன்று என்பதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

பல்வேறு சவால்களுக்கு மத்தியில், நாடு முழுவதும் தங்கள் கடமைகளை மேற்கொண்டு வரும் மருத்துவர்கள் உட்பட சுகாதாரப் பணியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வது ஆளும்தரப்பு மற்றும் பொதுமக்களின் பொறுப்பு என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

இதேவேளை, அனுராதபுரம் போதனா வைத்தியசாலையின் வைத்தியர்கள் செவ்வாய்க்கிழமை (11) காலை 10. 00 மணி முதல் முன்னெடுத்துள்ள பணிபுறக்கணிப்புப் போராட்டம் காலவரையறையின்றி நீடிக்கப்பட்டுள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரை கைது செய்வதுடன் வைத்தியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்வரை போராட்டத்தை கைவிடப் போவதில்லை - - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# போரால் தடைப்பட்டுப்போன கைதடிக்கான போக்குவரத்துசேவையை மீள ஆரம்பிக்குக

## நிர்மலா மகேந்திரன் ஊராட்சி முற்றக் கூட்டத்தில் கோரிக்கை

(சுபேசன்)

போர்ச் சூழலால் நிறுத்தப்பட்ட கைதடி வடக்கு மற்றும் கிழக்குப் பகுதி மக்களுக்கான போக்குவரத்துச் சேவையை மீளவும் ஆரம்பிக்க வேண்டும் என சாவகச்சேரிப் பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினரும், யாழ் மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் பெண் பிரதிநிதிகள் சம்மேளன உறுப்பினருமான திருமதி நிர்மலா மகேந்திரன் இலங்கை போக்குவரத்துச்சபையின் வடமாகாண அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெற்ற ஊராட்சி முற்ற நிகழ்வில் கலந்து கொண்டு சமூக மட்டப் பிரச்சினைகளை வெளிப்படுத்திய போதே அவர் மேற்படி கோரிக்கையை முன்வைத்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்; -

தென்மராட்சிப் பிரதேசத்தின் கைதடிச் சந்தியில் இருந்து 4 கிலோமீற்றர் தொலைவில் கைதடி வடக்கு மற்றும் கைதடி கிழக்கு ஆகிய இரு கிராமங்கள் காணப்படுகின்றன.

இங்கு 883 குடும்பங்களைச் சேர்ந்த 2591 அங்கத்தவர்கள் வசிக்கின்றனர்.

அதில் பாடசாலை மாணவர்கள், பெண் தலைமைக் குடும்பங்கள், மாற்றுத் திறனாளிகள் ,அரச உத்தியோகத்தர்கள் உள்ளடங்கின்றனர்.

கடந்த 2006 ஆம் ஆண்டு வரை மேற்படி இரண்டு கிராமங்களுக்குமான போக்குவரத்துச்சேவை இடம்பெற்ற போதிலும் உள்நாட்டு யுத்த நிலைமை காரணமாக அந்தச்சேவை நிறுத்தப்பட்டு மீளவும் இன்றுவரை செயற்படுத்தப்படாத நிலைமை காணப்படுகின்றது.



இதனால் அரசஉத்தியோகத்தர்கள், விவசாயிகள், பெண் தலைமைக் குடும்பங்கள், சமுர்த்திப் பயனாளிகள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தமது கிராமத்தில் இருந்து 4 கிலோமீற்றர் தூரம் நடந்தே கைதடி சந்தியை அடைய வேண்டியுள்ளது. இதனால் பெண்கள் பாதுகாப்புப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

எனவே இவற்றைக் கருத்திற் கொண்டு இலங்கை போக்குவரத்துச் சபை மீளவும் கைதடி வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளுக்கான போக்குவரத்துச்சேவையை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேலும் அவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

# முன்பள்ளி பாடசாலைகளுக்கு தளபாடங்கள் வழங்கி வைப்பு

(தில்சாத் பர்வீஸ்)

தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும், கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதியமைச்சரும், அம்பாறை மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவருமான வசந்த பியதிஸ்ஸ எம்.பியின் பண்முகப்படுத்துப்பட்ட நிதியுதவி கீழ் முன்பள்ளி பாடசாலைக்கு தள பாடங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

சென்னல் சாஹிரா முன்பள்ளி பாடசாலைக்கு தளபாடங்கள் வழங்கும் நிகழ்வு தேசிய மக்கள் சக்தியின் சம்மாந்துறை தொகுதி அமைப்பாளர் வை.எம். நவாஸ் தலைமையில் திங்கட்கிழமை சென்னல் சாஹிரா முன்பள்ளி பாடசாலையில் நடைபெற்றது.

இதன் போது, பாடசாலை அதிபர் சிப்னா அவர்களிடம் பல லட்சம் பெறுமதி வாய்ந்த தள பாடங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில், சம்மாந்துறை மல்கம்பிட்டி வட்டார தலைவரும் சமூக சேவையாளருமான எஸ்.எம்.ஏ. மஜீத், மல்கம்பிட்டி வட்டார உப தலைவரும் செயற்குழு உறுப்பினருமான ஏ.எம். ஹினாயத்துல்லாஹ், மல்கம்பிட்டி வட்டார செயற்குழு உறுப்பினர்களான ஏ.எம். பாரூக், ஐ. அபூபக்கர், எம்.எம். ஷிப்னாஸ், பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.







# அனுமதிப்பத்திரமின்றி மாடுகளை கடத்தியவர் யாழில் கைதானார்

அனுமதிப்பத்திரம் இன்றி மாடுகளை கடத்திச் சென்ற சந்தேகநபர் ஒருவர் திங்கட்கிழமை வட்டுக்கோட்டை பொலிஸால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த குறித்த சந்தேகநபர் சுழிபுரத்தில் இருந்தே லொறியில் 3 மாடுகளை கடத்திச் செல்ல முற்பட்ட வேளை இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சந்தேகநபரை வட்டுக்கோட்டை பொலிஸ்நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விசாரணைகளின் பின்னர் அவர் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துப் படவுள்ளார்.

# ஆனையிறவு தேசிய உப்பளத்தில் சர்வதேச மகளிர்தின நிகழ்வுகள்

கிளிநொச்சி மாவட்டச் செயலகமும் மாவட்ட மகளிர் விவகாரக் குழுக்களும் இணைந்து நடத்தும் 2025 ஆம் ஆண்டின் சர்வதேச மகளிர் தின நிகழ்வு திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு ஆனையிறவு தேசிய உப்பளத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி ஆனையிறவு தேசிய உப்பளத்தில் பணியாற்றும் பெண் பணியாளர்களை மையப்படுத்தியதாக குறித்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

'நிலையான எதிர்காலத்தை உருவாக்குவதற்கு வலுவான வழிகாட்டி' எனும் தொனிப்பொருளில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்(காணி) இ.நளாயினி அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

சிறப்பு விருந்தினராக ஆனையிறவு உப்பளத்தின் முகாமையாளர் வி.சுகந்தனும், கௌரவ விருந்தினராக சட்டத்தரணி ரா.சரண்யா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது விருந்தினர்கள் வரவேற்கப் பட்டதைத் தொடர்ந்து, விருந்தினர்களின் உரைகள் அனுபவப்பகிர்வுகள் நடைபெற்றன.



சிறந்த பெண்தொழில் முயற்சியாளர்கள் கௌரவிக்கப்பட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

மேலும் ஆனையிறவு தேசிய உப்பளத்தில் பணியாற்றும் பெண் பணியாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இதனைவிட கிரிவலம் பவுண்டேஷனால் இரண்டு பல்கலைக்கழக மாணவிகளுக்கு மடிக்கணினி மற்றும் கற்றல் உதவுதொகையும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் உதவி மாவட்டச்செயலாளர் ஹ.சத்யஜீவிதா, மாவட்ட செயலக பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் நி.குமுதினி, நிர்வாக உத்தியோகத்தர் ம.அருந்தவராணி, கண்டாவளை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் பி.சுரேகா, கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் உதயனி நவரத்தினம், அனுசரணையாளர்கள், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலகங்களின் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், ஆனையிறவு தேசிய உப்பள உத்தியோகத்தர்கள் மற்றும் பெண் பணியாளர்கள் பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர். 316



## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# அநுராதபுரம் வெறும் சம்பவம் மட்டுமல்ல

பாலியல் வன்கொடுமை மீண்டும் சமூகத்தில் பெரும் பேசு பொருளாகமாறியுள்ளது. அநுராதபுரம்வைத்தியசாலையில் ஒரு பெண் மருத்துவர் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டதை அடுத்து இந்த விவகாரத்தின் மீது சமூகத்தின் கவனம் திரும்பியுள்ளது. யாழ்ப்பாணத்தில் புங்குடுதீவு மாணவி கூட்டு பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டதைத் தொடர்ந்து சமூகத்தின் கவனம் இந்தக் கொடுமையின் பக்கம் திரும்பியதற்குப் பின்னர் தற்போது மீண்டும் சமூகக் கவனம் திரும்பியிருக்கிறது.

உலக மகளிர் தினத்தைக் கடந்த ஒரு சில நாட்களில் இந்தக் கொடுமை அரங்கேறியிருப்பது "முறைமை மாற்றம்" குறித்த உண்மையான அவசியத்தையும் உணர்த்துகின்றது. அதுமட்டுமன்றி பெண்களின் பாதுகாப்பு குறித்த பலத்த சந்தேகங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

''இந்தச் சம்பவம் மருத்துவர் தொலைத் தொடர்பு கடமையில் இருக்கும்போதே இடம்பெற்றுள்ளது. கடமை அறைக்கு செல்லும்போதே சம்பவம் இடம்பெற்றிருக்கிறது. வெளிநபர் ஒருவர் கத்திமுனையில் வைத்தியரை அச்சுறுத்தி, கயிற்றினால் கட்டிவைத்துவிட்டு, தொலை தொடர்பு அறைக்குள்ளேயே அவரை மிகவும் மோசமான முறையில் வன்கொடுமைக்கு உள்ளாகியுள்ளார்.

எமது நாட்டின் வைத்தியசாலை வரலாற்றில் இவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றிருப்பதாக நாங்கள் அண்மைக்காலம் வரை கேள்விப்பட்டதில்லை. அநுராதபுரம் போதனா வைத்தியசாலை அதிகளவான மக்கள் நடமாடும் இடம். நாட்டில் இருக்கும் பெரிய வைத்தியசாலை. அங்கு கடமையில் இருக்கும்போதே ஒரு பெண் மருத்துவருக்கு இப்படி நிகழ்ந்திருப்பது பெரும் பிரச்சினையாகும்'' என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சுட்டுக்காட்டுவது முற்றிலும் உண்மை. பாதுகாக்கப்பட்ட நிறுவனம் ஒன்றுக்குள் புகுந்து, அங்கு கடமையில் இருக்கும் அரச அதிகாரி ஒருவர் மீது குற்றம் புரிவதற்குரிய துணிவு எங்கிருக்கிருந்து கிடைக்கின்றது என்பதற்கான கேள்விக்கு விடை காணப்படுவது அவசியம்.

நீதிமன்றத்திற்கு உள்ளே இடம்பெற்ற கொலை, வைத்தியசாலைக்குள்ளே இடம்பெற்ற வன்கொடுமை இவை இரண்டுமே இவற்றின் பின்னால் திட்டமிட்ட குற்றக்கும்பல்களின் ஒழுங்கமைக்கப்பட்ட செயல்களின் பின்னணிகள்குறித்துஆராயப்படவேண்டியதன்அவசியத்தை ஆழமாக உணர்த்துகின்றன.

"அநுராதபுரம்வைத்தியசாலையில்இருக்கும்பாதுகாப்புகூட இல்லாத நூற்றுக்கணக்கான வைத்தியசாலைகள் எமது நாட்டில் இருக்கின்றன. இவ்வாறான சம்பவத்தினால் எமது நாட்டு பெண் வைத்தியர்கள் பெரும் அச்சத்துக்கும் அதிர்ச்சிக்கும் ஆளாகியுள்ளனர் என்கிற அவரது கருத்தும் ஏற்றுக்கொள்ளக்கூடியதே.

"எனக்கும் ஒரு மகள் இருக்கிறாள். இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் அனைவரும் உணர்வு ரீதியான பாதிப்பு இருக்கிறது. ஆனால் உணர்வுகள் மாத்திரம் இருந்து போதாது. இந்த நாட்டில் வைத்தியர்கள் உள்ளிட்ட பெண்களை பாதுகாத்து அவர்களுக்கு பாதுகாப்பு வழங்க நாங்கள் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்ற எதிர்க் கட்சித் தலைவரின் கருத்து அவருடையது மட்டுமல்ல. ஒட்டுமொத்த சமூகத்தினதும்கூட.

இந்த வன்கொடுமைச் சம்பவத்தையும் மற்றொரு சம்பவமாகக் கடந்துசென்றுவிடாமல், வெறும் குற்றமாக ஒதுக்கிவிட்டுவிடாமல், தனிமனிதப் பிறழ்வின் வெளிப்பாடாக தள்ளு வைத்துவிடாமல் இதனை மாற்றவும் தேற்றவும் என்ன செய்யவேண்டும் என்று சிந்திப்பதும் அதற்கான பிள்ளையார் சுழியாக இதனைக் கொள்வதும் அவசியம். ஆளும்தரப்பு தீவிரமாகக் கவனத்தில் எடுக்கவேண்டிய விடயம் அது.



# புதிய ஒழுங்கு நோக்கி நகரும் உலகு

**குருசாமி**

அமெரிக்க அதிபரின் வெள்ளை மாளிகையின்ஓவல்அலுவலகத்தில்அண்மையில் அதிபர்டொனால்ட் டிரம்ப், உக்ரைன் அதிபர்வொலோதிமீர்ஸெலென்ஸ்கி ஆகியோர் இடையே நடைபெற்ற பேச்சு பாதியிலேயே முடிந்தது. இதுபோல இரு நாட்டு அதிபர்களின் சந்திப்பு எந்த ஒப்பந்தமும் கையொப்பமாகாமலும், கூட்டாக செய்தியாளர்களுக்குப் பேட்டி அளிக்காமலும் நிறைவடைந்திருப்பது இதுவே முதல் முறை எனக் கூறப்படுகிறது.

2022, பெப்ரவரி முதல் நடைபெற்று வரும் ரஷ்யா - உக்ரைன் இடையிலான போரை முடிவுக்குக் கொண்டு வரவும், இந்தப் போரில் உக்ரைனுக்கு இதுவரை அளித்த உதவிகளுக்கு கைமாறாக அந்த நாட்டின் அரிய கனிம வளங்களை வெட்டி எடுக்க அமெரிக்காவுக்கு அனுமதி வழங்க வகை செய்யும் ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கும் வெள்ளை மாளிகைக்கு வருமாறு ஸெலென்ஸ்கிக்கு டிரம்ப் அழைப்பு விடுத்தார்.

இதையேற்று, பேச்சு நடத்த வெள்ளை மாளிகைக்கு வருகை தந்தார்ஸெலென்ஸ்கி. இந்தப் பேச்சு தொடக்கத்தில் சுமுகமாகத்தான் நடைபெற்றது. உக்ரைனுக்கு அளித்த பெருமளவிலான நிதியுதவி, இராணுவத் தளவாடங்கள் உதவிக்காக ஸெலென்ஸ்கி இதுவரை நன்றி தெரிவிக்கவில்லை என்றும், இந்தப் பேச்சுக்கு சாதாரண உடை (காற்சட்டை- டி ஷர்ட்) அணிந்து வந்து தங்களை அவமதித்துவிட்டார் எனவும் அமெரிக்க துணை அதிபர்ஜே.டி.வான்ஸ் கடுமையாக விமர்சித்தபோது, பேச்சு திசைமாறியது.

அமெரிக்கா செய்த உதவிகளுக்காக ஏற்கெனவே பலமுறை நன்றி தெரிவித்துள்ளதாக ஸெலென்ஸ்கி சுட்டிக் காட்டியதை வான்ஸ் ஏற்கவில்லை. இந்தப் பேச்சு தொடங்குவதற்கு முன்பாக அதிபர்டிரம்ப்பிடம் ஏன் நன்றி தெரிவிக்கவில்லை என வான்ஸ் மீண்டும் எழுப்பிய கேள்வி காரசார விவாதத்துக்கு வித்திட்டது.

அமெரிக்கா இராணுவ ரீதியில் உதவிகள் அளித்திருக்காவிட்டால், இரண்டே வாரங்களில் உக்ரைனை ரஷ்'யா வீழ்த்தியிருக்கும் என்றும், இதுவரை செய்த 35,000 கோடி டொலர்நிதியுதவிக்காக உக்ரைனிலுள்ள அரிய கனிம வளங்களை அமெரிக்கா வெட்டி எடுத்துக்கொள்ள வகை செய்யும் ஒப்பந்தத்தில் கையொப்பமிட வேண்டும் என்றும் ஸெலென்ஸ்கியிடம் டிரம்ப் வலியுறுத்தினார்.

உக்ரைன் மீது போர்தொடுத்த மூன்றாவது நாளிலேயே ரஷ்ய அதிபர்விளாதிமீர்புதின் சொன்னதையே டிரம்ப் கூறுகிறார் எனவும், தங்களது நாட்டின் பாதுகாப்புக்கு அமெரிக்கா உத்தரவாதம் அளித்தால் மட்டுமே ஒப்பந்தத்தில் கையொப்பமிட முடியும் என்றும் ஸெலென்ஸ்கி உறுதிபடத் தெரிவித்துவிட்டார்.

இதையடுத்து, ரஷ்யாவுடனான போரை முடிவுக்குக் கொண்டு வர, அமெரிக்கா எடுக்கும் முயற்சிகளுக்கு ஸெலென்ஸ்கி முட்டுக்கட்டை போடுகிறார் எனவும், இது மூன்றாம் உலகப் போருக்கு வழிவகுப்பதாக அமையும் என்றும் டிரம்ப் மிகக் கடுமையாக விமர்சித்தார். இதனால், அதிருப்தியடைந்த ஸெலென்ஸ்கி ஒப்பந்தத்தில் கையொப்பமிடாமலும் கூட்டாக செய்தியாளர்களுக்குப் பேட்டி அளிக்காமலும்ஓவல்அலுவலகத்திலிருந்து திடீரென வெளியேறிச் சென்றார். இதை எதிர்பார்க்காத டிரம்ப்பும், வான்ஸும் செய்வதறியாது திகைத்து நின்றனர்.

பிளவுபடாத முந்தைய சோவியத் ஒன்றியத்தின் ஒரு பகுதியாக இருந்த உக்ரைனை ரஷ்யாவுடன் மீண்டும் இணைக்கவேண்டும் என அதிபர்புடின் 2014-ஆம் ஆண்டிலிருந்தே முயற்சி செய்து வருகிறார். தொடக்கத்தில் சிறிய அளவிலான இராணுவ நடவடிக்கைகள் மூலம் உக்ரைனின் சில பகுதிகளை ஆக்கிரமித்து, அவற்றை ரஷ்யாவுடன் இணைத்துக்கொண்டார்புடின். இதனால், தங்களது நாட்டை புடின் முழுமையாக அபகரித்துவிடுவார்என்ற அச்சத்தில், அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அங்கம் வகிக்கும் நேட்டோ கூட்டமைப்பில் உக்ரைனை சேர்த்துக் கொள்ளவேண்டும் என ஸெலென்ஸ்கி கோரிக்கை விடுத்தார். இதனால், ஆத்திரமடைந்த புடின், 2022-ஆம் ஆண்டு, பெப்ரவரியில் உக்ரைன் மீது முழு வீச்சிலான போரைத் தொடங்கினார்.

இந்தப் போருக்குக் காரணமான ரஷ்யாவை பேச்சுக்களில் நேரடியாக ஈடுபடுத்தாமல் எப்படி போர்நிறுத்தம் செய்ய முடியும்என்பது குறித்து சிந்திக்கத் தவறிவிட்டார்டிரம்ப். உலக நாடுகள் மத்தியில் அமைதியின் காவலர்என்கிற பிம்பத்தைத் தனித்து உருவாக்கிக் கொள்ள டிரம்ப் மேற்கொண்ட அவசர கதியிலான நடவடிக்கைகள் புதிய

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

# ‘கிளீன் சிறிலங்காவும் பாலின சமத்துவமும்’ தொனிப்பொருளில் சர்வதேச மகளிர் தினம்

கிளீன் சிறிலங்காவும் பாலின சமத்துவமும் எனும் தொனிப்பொருளில் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வவுனியாகாமினிமகாவித்தியாலயத்திற்கு முன்பாக கண்காட்சியும் போட்டி நிகழ்வும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

வவுனியாதெற்குபிரதேசசெயலகத்தின் ஏற்பாட்டில், பிரதேச செயலாளர் காஞ்சன குமாரவின் தலைமையில் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.சுபாசினியின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வவுனியா மாவட்ட செயலாளர் பீ.ஏ.சரத் சந்திர, மேலதிக மாவட்ட செயலாளர் தி.திரேஸ்குமார், நா.கமலதாசன் (காணி) ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்திருந்தனர்.

வவுனியா மாவட்டத்தை சேர்ந்த அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளிற்கு இடையிலான குறித்த கண்காட்சி மற்றும் போட்டி நிகழ்வில் கிளீன் சிறீலங்கா வேலைத்திட்டம் தொடர்பாகவும் பெண்களிற்கு எதிரான வன்முறைகள் மற்றும் அது தொடர்பான ஓவியங்களும், சாதனை பெண்கள் தொடர்பான படங்கள் உட்பட பல்வேறு விடயங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. 100







## டிரம்ப் ...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

நெருக்கடியைஏற்படுத்தி இருக்கின்றன.

பிளவுபடாத சோவியத் ஒன்றியத்துக்கும், அமெரிக்காவுக்கும் இடையே தங்களது வல்லாதிக்கத்தை நிலை நிறுத்த பல்லாண்டுகளாக பனிப் போர்நீடித்து வந்தது. சோவியத் ஒன்றியம் பிளவுபட்டு, பல்வேறு நாடுகளாக சிதறுண்ட பிறகும் ரஷ்யாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையிலான உறவு முழுமையாகச் சீரடையவில்லை. இதற்குக் காரணம், அமெரிக்க அதிபர்களில் பெரும்பாலானோர்ரஷ்யாவுக்கு எதிரான நிலைப்பாட்டை தொடர்ந்து பின்பற்றி வந்ததுதான்.

இந்த நிலையில், ஸெலென்ஸ்கியிடம் ரஷ்யாவின் தூதுவர்போல அதிபர்டிரம்ப் கடுமை காட்டியது உலக அரங்கில் அமெரிக்காவின் வல்லாதிக்கத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது. இதுவரை அமெரிக்காவின் உற்ற நண்பனாக இருந்த ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அனைத்தும், உக்ரைனுக்கு ஆதரவாக அணி திரண்டுள்ளன.

உக்ரைனுக்கு எதிரான டிரம்ப்பின் இந்த நிலைப்பாட்டால், அமெரிக்காவும், ரஷ்யாவும் நெருங்கி வரக்கூடிய புதியதொரு உலக முறைமை (ஐளழ ழலிஷயி- லிஷ-ளஷ) உருவாவதற்கு வழிவகுத்துள்ளது. கம்யூனிஸ நாடுகளான ரஷ்யாவும், சீனாவும் கைகோர்த்துச் செயல்பட்டு வரும் நிலையில், இந்த இரு நாடுகளுடன் அமெரிக்காவும் இணைந்து செயல்படத் தொடங்கினால், ஏனைய நாடுகள் எத்தகைய நிலைப்பாட்டை எடுக்கும் என்பதைப் பொறுத்திருந்து பார்க்கவேண்டும்.



# கொழும்பிலிருந்து புத்தூருக்கு சைக்கிளில் வந்தடைந்து 74 வயது முதியவர் சாதனை



கொழும்பிலிருந்து 450 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள வடபகுதி புத்தூர் நகரை சைக்கிளின் மூலம் மூன்றே நாள்களில் சென்றடைந்து பருத்தித்துறையைச் சேர்ந்த 74 வயதுடைய செல்வத்தம்பி குலராசாசாதனைபடைத்துள்ளார்.

யாழ்ப்பாணம் - புத்தூர் சென்ற் லூக்ஸ் மெதடிஸ்ற் மிஷன் வைத்தியசாலைக்கு அத்தியாவசியசுகாதாரவசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கான நிதியை திரட்டுவதற்காக இவர் இந்த சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

3தசாப்தகாலத்துக்குமுன்புஆஸ்திரேலியா நாட்டுக்கு புலம்பெயர்ந்து சென்ற செல்வத்தம்பி குலராசா பருத்தித்துறை - புலோலி கிழக்கை பிறப்பிடமாகக் கொண்டவர் ஆவார்.

இவரது சைக்கிள் சவாரியில் அவரது இரண்டுஆண்பிள்ளைகள்உட்பட70சைக்கிள் செலுத்துநர்கள் பங்குபற்றியிருந்தனர்.

இதன் மூலம் 1,30,000 பவுண்ட் நிதி திரட்டப்பட்டுள்ளது.

# சீனத் தூதுவரை சந்தித்த சிறிரெலோ



சிறி தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகம் ப.உதயராசா திங்கட்கிழமை கொழும்பில் உள்ள சீனத் தூதுவர் காரியாலயத்தில் இலங்கைக்கான சீன நாட்டின் அரசியல் உயர்ஸ்தானிகர்சின்லிஹோங் அவர்களுடன் சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

இதன்போது வன்னி பிரதேசத்தில் சீன நாட்டின் நிறுவனத்தினூடாக பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவும், மக்களின் பொருளாதாரத்திற்கும், கைத்தொழில்களை ஊக்குவிப்பது தொடர்பாகவும் கலந்துரையாடியிருந்தனர்.

குறித்த சந்திப்பானது எதிர்காலத்தில் வன்னி மக்களின் நலனுக்கு ஏதுவாக இருக்கும் என சிறிரெலோ கட்சியின் செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. 100

# வடக்கு, தெற்கிலிருந்து கிழக்கிற்கு தோழமைப் பரிமாற்றப் பயணம்

(சுபேசன்)





சட்டம் மற்றும் சமூக நம்பிக்கைக்கான அமைப்பின் ஏற்பாட்டில் அண்மையில் வடக்கு மற்றும் தெற்கில் இருந்து கிழக்கு மாகாணத்திற்கான தோழமைப் பரிமாற்றப் பயணம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது கிழக்கு மாகாணத்தின் ஹிங்குரனைப் பிரதேசத்தில் கரும்பு விவசாயிகள் எதிர்நோக்கின்ற பிரச்சினைகள், அக்கரைப்பற்று மக்களின் காணி உரிமைப் பிரச்சினை, கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள் வனவளத் திணைக்களத்தால் எதிர்நோக்கின்ற பிரச்சினைகள், இராணுவ மயமாக்கல் செயற்பாடுகளால் கிழக்கு மாகாண மக்கள் எதிர்நோக்கின்ற பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டது.

மேற்படி பரிமாற்ற விஜயத்தில் வடக்கு மற்றும் தென் மாகாணங்களில் இருந்து ஊடகவியலாளர்கள், சட்டத்தரணிகள், திருநர் சமுகத்தினர், சமூக சேவகர்கள் பங்கேற்றிருந்தனர்.

சட்டம் மற்றும் சமூக நம்பிக்கைக்கான அமைப்பானது பிறைட் திட்டத்தின் கீழ் மேற்படி பரிமாற்ற விஜயங்களை முன்னெடுத்து வருகின்றது.அந்த வகையில் கடந்த வருடம் வடக்கில் உள்ள சமூகத் தலைவர்களை தென் பகுதிக்கும்-தென் பகுதியில்உள்ளசமூகத்தலைவர்களைவடக்கு மாகாணத்திற்கும் மக்களின் உரிமைகள் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பாக ஆராய பரிமாற்ற விஜயத்தில் இணைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மகளிர் தினத்தை முன்னிட்டு கற்றல் பொருள்கள் வழங்கல்

(தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை மலையடிக்கிராமம் 04 யில் இயங்கிவரும் புலம்பெயர் தொழிலாளர் நலன்புரி சங்கம், மாதர் கிராம அபிவிருத்தி சங்கம், அல் மூமினா ஆடை உற்பத்தி சிறு கைத்தொழில் சங்கம் ஆகிய மூன்று சமூக அமைப்புகளின் உறுப்பினர்களின் ஏற்பாட்டில் சம்மாந்துறை அஸ் ஸமா வித்தியாலயத்தின் அதிபர் ஏ.எல். அபூபக்கர் தலைமையில் பாடசாலை கேட்போர் கூடத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) மகளிர் தின நிகழ்வு நடைபெற்றது.

புலம்பெயர் தொழிலாளர் நலன்புரி சங்கம், மாதர் கிராம அபிவிருத்தி சங்கம், அல் மூமினா ஆடை உற்பத்தி சிறு கைத்தொழில்சங்கம்ஆகியமூன்றுசங்கங்களின்அங்கத்துவர்களால் வி. டி. மூமினாவின் 16 வருட சமூக சேவையைப் பாராட்டி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது.

மேலும், வறுமைக்கோட்டின் கீழ் காணப்படும் தெரிவுசெய்யப்பட்ட எட்டு பாடசாலை மாணவர்களுக்கு கற்றல், கற்பித்தல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில், சம்மாந்துறை பிரதேச செயலக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.ஐ. அஸ்ரப், நிலாந்தினி, ரோஷான், மாதர் கிராம அபிவிருத்தி சங்க உத்தியோகத்தர்களான ஏ.வினோதினி, எம்.ஏ. சனுஜா வேகம், மலையடிக்கிராமம் 04 பிரிவுக்கு உரிய அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ.எல்.பஸ்மிறா, புலம்பெயர் தொழிலாளர் நலன்புரி சங்க தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.











# தேர்தல் பங்குதாரர்களுடனான மாவட்ட மட்ட கலந்துரையாடல்

(சுபேசன்)

தேர்தல் செயன்முறையில் பெண்கள், இளையோர் மற்றும் குறைந்தளவு பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருக்கும் குழுக்களின் ஈடுபாடு



மற்றும் தேர்தல் தொடர்பான தகவல்களின் தாக்கம் பற்றிய தேர்தல் பங்குதாரர்களுடனான மாவட்ட மட்ட கலந்துரையாடல் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் சர்வோதய மண்டபத்தில் இடம்பெற்றிருந்தது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மற்றும் தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் - ஆகியவற்றின் ஏற்பாட்டில் மேற்படி கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது.



மேற்படி நிகழ்வானது தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் ஏ.எம்.என்.விக்டர் ,நிலையத்தின் வட மாகாண ஒருங்கிணைப்பாளர் சி. அனோஜன் , மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வ.நிக்சன் ஆகியோரின் ஒழுங்கமைப்பில், யாழ் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர், பொலிஸார், ஊடகவியலாளர்கள், தேர்தல் திணைக்கள உத்தியோகத்தர்கள்,அரசியல் கட்சி உறுப்பினர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்களின் பங்குபற்றுதலுடன் மேற்படி கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# முல்லைதீவிலும் கட்டுப்பணத்தை செலுத்தியது தமிழ் அரசுக் கட்சி

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணம் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியால் நேற்று (செவ்வாய்க்கிழமை) செலுத்தப்பட்டது.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, மாந்தைகிழக்கு, துணுக்காய் ஆகிய நான்கு உள்ளூராட்சிசபைகளிலும் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி தேர்தலில் போட்டியிடுவதற்குரிய கட்டுப்பணம் இவ்வாறு செலுத்தப்பட்டுள்ளது.

அந்தவகையில் வன்னிமாவட்ட நாடாளு மன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் முல்லைத்தீவுமாவட்ட செயலாளருமான துரைராசா ரவிகரன் முல்லைத்தீவு மாவட்ட தேர்தல்கள்



அலுவலகத்தில் கட்டுப்பணத்தைச் செலுத்தினார்.

மேலும் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் மத்தியகுழு உறுப்பினர் அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளஞ்செழியன், இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் பொதுச்சபை உறுப்பினர்களான இரத்தினம் ஜெகதீசன், கிருஸ்ணபிள்ளைசிவகுரு ஆகியோரும் இதில் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர் Kalaikkathir

## வன்கொடுமைச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு தொடர்பில் பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அவர், நாடாளுமன்றத்தில் நேற்று வரவு செலவுத் திட்டத்தின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றினார். அவர் அங்கு தெரிவித்ததாவது:

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் திங்கட்கிழமை இரவு வைத்தியசாலை வளாகத்தில் பெண் வைத்தியர் ஒருவர் வன்கொடுமைக்கு ஆளாகியுள்ளார்.

இந்தச் சம்பவம் மருத்துவர் தொலைத் தொடர்பு கடமையில் இருக்கும்போதே இடம்பெற்றுள்ளது. கடமை அறைக்கு செல்லும்போதே சம்பவம் இடம்பெற்றிருக்கிறது. வெளிநபர் ஒருவர் கத்திமுனையில் வைத்தியரை அச்சுறுத்தி, கயிற்றினால் கட்டிவைத்துவிட்டு, தொலை தொடர்பு அறைக்குள்ளேயே அவரை மிகவும் மோசமான முறையில் வன்கொடுமைக்கு உள்ளாகியுள்ளார்.

எமது நாட்டின் வைத்தியசாலை வரலாற்றில் இவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றிருப்பதாக நாங்கள் அண்மைக்காலம் வரை கேள்விப்பட்டதில்லை. அநுராதபுரம் போதனா வைத்தியசாலை அதிகளவான மக்கள் நடமாடும் இடம். நாட்டில் இருக்கும் பெரிய வைத்தியசாலை. அங்கு கடமையில் இருக்கும்போதே ஒரு பெண் மருத்துவருக்கு இப்படி நிகழ்ந்திருப்பது பெரும் பிரச்சினையாகும்.

இந்தச் சம்பவத்தின் மூலம் நாட்டில் வைத்தியசாலை வளாகத்தில் பெண் வைத்தியர்களின் பாதுகாப்பு தொடர்பில் பெரும் பிரச்சினை எழுகின்றது. அநுராதபுரம் வைத்தியசாலையில் இருக்கும் பாதுகாப்புகூட இல்லாத நூற்றுக்கணக்கான வைத்தியசாலைகள் எமது நாட்டில் இருக்கின்றன. இவ்வாறான சம்பவத்தினால் எமது நாட்டு பெண் வைத்தியர்கள் பெரும் அச்சத்துக்கும் அதிர்ச்சிக்கும் ஆளாகியுள்ளனர்.

கடந்த காலங்களில் வைத்தியர்களுக்கு எதிராக மக்களைத் தூண்டிவிடும் ஆத்திரமூட்டும் நிகழ்வுகள் திட்டமிடப்பட்ட வகையில் இடம்பெற்றன. கோபமூட்டும் சம்பவங்கள் இடம்பெற்றன. இந்தச் சம்பவத்தை நாங்கள் வன்மையாக கண்டிக்கவேண்டும்.

அத்துடன் தேசிய பாதுகாப்பு தொடர்பில் நாங்கள் பேசும்போது அது தொடர்பில் நகைச்சுவை செய்கிறார்கள். கேலிச்சித்திரமும் வரைந்திருந்தார்கள். ஆனால் தற்போது அரச சேவையில் மாத்திரமல்லாது, சேவையில் இருக்கும் பெண் ஊழியர்களுக்கு தங்களின் கடமையைக்கூட மேற்கொள்ள முடியாத கஷ்டமான நிலைக்கு ஆளாகி இருப்பதன் மூலம் உண்மையிலே மக்களின் பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு தொடர்பில் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கிறது.

பெண் வைத்தியர் ஒருவர் இவ்வாறான பாலியல் துஷ்பிரயோகத்துக்கு ஆளாகி இருப்பதை ஆளும்தரப்புக்குத் தெரியுமா, அப்படியானால் எப்போது தெரிந்துகொண்டது? அது தொடர்பில் எடுக்கப்போகும் நடவடிக்கை என்ன?

தொழில்துறைகளில் பணிபுரியும் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து பெண்கள் தினத்தில் இந்த சபையிலும் வெளியிலும் நாங்கள் கதைத்து நிகழ்வுகளை மேற்கொண்ட நிலையில், இவ்வாறான சம்பவத்தினால் பெண்கள் நிர்க்கதியானதொரு நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

எனக்கும் ஒரு மகள் இருக்கிறாள். இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் அனைவரும் உணர்வு ரீதியான பாதிப்பு இருக்கிறது. ஆனால் உணர்வுகள் மாத்திரம் இருந்து போதாது. இந்த நாட்டில் வைத்தியர்கள் உள்ளிட்ட பெண்களை பாதுகாத்து அவர்களுக்கு பாதுகாப்பு வழங்க நாங்கள் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். கடமை நிலையத்தில் இடம்பெற்ற சம்பவம். அதனால் இந்த சம்பவம் தொடர்பில் அரசாங்கம் எடுக்க இருக்கும் நடவடிக்கை என்ன என்பதுடன் வைத்தியசாலைகள் உள்ளிட்ட தொழிற்சாலைகளில் கடமை புரியும் பெண்களின் பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கம் எடுக்கப்போகும் நடவடிக்கை என்ன என கேட்கிறோம் என்றார்.

பதிலளித்துப் பேசிய அமைச்சர் தெரிவித்ததாவது:

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் பெண் வைத்தியர் ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் எடுத்துரைத்தார். இந்தச் சம்பவம் கவலைக்குரியது.

பெண் வைத்தியரைப் பாலியல் வன்கொடுமை செய்த குற்றத்துடன் தொடர்புடைய சந்தேகநபரைக் கைது செய்வதற்கு ஐந்து பொலிஸ் குழுக்கள் தீவிர விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றன.

அந்தப் பெண் வைத்தியர் தனது கடமைகளை முடித்துவிட்டு வைத்தியர் விடுதிக்குச் சென்றுகொண்டிருந்தபோதே பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் திங்கட்கிழமை (நேற்றுமுன்தினம்) மாலை 6.30-7 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டுள்ளார். இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்றநபர் என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. சந்தேகநபர் வெகுவிரைவில் கைது செய்யப்படுவார். விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன - என்றார்.

## குரங்குகளுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி உரையாற்றும் போதே பிரதி அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

பயிர்களைச் சேதப்படுத்தும் குரங்குகள், மயில்கள், பன்றிகள் தொடர்பான 5 நிமிடக் கணக்கெடுப்பு மார்ச் 15 நாடு முழுவதும் நடைபெறவுள்ளதாக ஆளும்தரப்பு அறிவித்துள்ளது. இதுவொரு காட்டு உயிரிகள் தரவெடுப்பு அல்ல என்றும், பயிர்களைச் சேதப்படுத்தும் விலங்குகள் குறித்த ஒரு மதிப்பீடு மட்டுமே என்றும் ஆளும்தரப்புத் தெரிவித்துள்ளது. இதுவரை இந்த விலங்குகள் குறித்த எந்தவொரு தரவும் இல்லாதிருப்பதால் இந்த மதிப்பீடு மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வருடாந்தம் பயிர்களில் முப்பது முதல் நாற்பது சதவீதம் வரை காட்டு விலங்குகளால் சேதமடைகின்றன என்று கூறப்படுகின்றது.

''இதைத் தடுப்பதற்காக சேதத்தை ஏற்படுத்தும் விலங்குகளை மதிப்பிடும் ஆளும்தரப்பின் முயற்சியைக் கேலி செய்பவர்களிடம் பிரச்சினைக்குத் தீர்வு கேட்டால், அவர்களிடம் பதில் இல்லை.

வருடத்திற்கு ஒரு முறை மக்கள் தானம் செய்வது போல, இனி ஒவ்வொரு நாளும் அந்த விலங்குகளுக்கு உணவளிக்கும் ஒரு திட்டத்திற்கு நாம் செல்லவேண்டும்.

இந்தப் பிரச்சினையைத் தீர்க்க சில தீர்வுகள், சில திட்டங்கள் தேவை. இந்த வனவிலங்கு பிரச்சினைக்கு ஒரு சிறந்த பதிலை ஏற்றுக்கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம். இதற்கு ஒரு தீர்வு இருந்தால், அதை நாங்கள் கேட்க விரும்புகிறோம்'' என்றார் அமைச்சர்.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை, போர்க் குற்றங்கள் அரசியல் நீதி என அனைத்திற்கும் சர்வதேசத் தலையீடு தேவை

## அருட்தந்தை சத்திவேல் கோரிக்கை

தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை, யுத்தக்குற்றங்கள் அரசியல் நீதி என அனைத்திற்கும் சர்வதேசத்தின் தலையீடு வேண்டும். அதனை மறுப்பவர்கள் குற்றவாளிகள் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அருட்தந்தை மா.சத்திவேல் செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

முன்னாள் பிரதமரும் ஜனாதிபதியுமான ரணில் விக்ரமசிங்கவோடு அல்ஜசீரா ஊடகவியலாளர் நடத்திய நேர்காணலைத் தொடர்ந்து தெற்கில் ரணில் விக்ரமசிங்கவிற்கு எதிராக மக்களின் கொந்தளிப்பு விழுந்துள்ளது.

பட்டலந்த வதைமுகாமை மையமாக வைத்து அதற்கு காரணமான பிரதான சூத்திரதாரியான ரணிலின் 'சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை பறிக்க வேண்டும்' எனும் குரல் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கையில் தற்போதைய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கா அவர்களும் இது தொடர்பில் விசாரணை நடத்தப்படும் எனக் கூறுவதில் எவ்வாறு நம்பிக்கை வைப்பது? ஒரு குற்றவாளி இன்னும் ஒரு குற்றவாளியை விசாரிக்க முடியுமா? அவ்வாறு விசாரித்தாலும் அது அரசியல் நோக்கம் கொண்டதாகவே இருக்கும்.

தெற்கில் ரணிலிற்கு எதிரான மனநிலை பட்டலந்தை வதைமுகாமை பற்றியதாகவே மட்டும் இருப்பதும் உருவாகி இனவாத தன்மையை வெளிப்படுத்துகின்றது.

யுத்த காலப்பகுதி தொடர்பிலும் யுத்த இறுதி கட்டத்தில் முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்தவை தொடர்பு கொள்ளும் அப்பேட்டியில் கேள்விகள் கேட்கப்பட்டன.

அவற்றிற்கும் பதில் அளிக்க ரணில் தடுமாறியதே நாம் அறிவோம். ஆனால் அதைப் பற்றி எல்லாம் கரிசனையோ அக்கறையோ இல்லாத மனநிலையையும் பட்டலந்த குற்றங்களை முன்னிலைப்படுத்தி தண்டிக்கப்பட வேண்டும் எனக்கோருவது பக்க சார்பானதும் இனவாத மனநிலையை கொண்டதுமாகும்.

அல்ஜசீரா ஊடகவியலாளர் தெற்கிலும் வடக்கிலும் நிகழ்த்தப்பட்ட வதைகள், கொடூரங்கள் யுத்தக் காலப்பகுதி தொடர்பிலும் குற்றங்கள் கேள்விக்கணைகள் தொடுகின்ற போது தெற்கு சார்ந்து மட்டும் சிந்திப்பதும் தமிழர் தேசத்தில் நிகழ்த்தப்பட்ட யுத்த குற்றங்கள் தொடரில் கருத்துக்கள் வெளியிடாது இருப்பது இரண்டு நாடுகள் என்பதையே காட்டி நிற்கின்றது.

இரண்டு நாடுகள் என்றாலும் அநியாயத்துக்கு எதிராக குரல் கொடுப்பது ஒவ்வொருவரினதும் தார்மீக பொறுப்பாகும். தற்போதும் அதனை காண முடியாமல் இருப்பது இனவாத அவல நிலையையே மீண்டும் உணர்த்துகின்றது.

பட்டர்அந்தமுகாமோடு தொடர்புபட்டவர்கள் அதற்கு துணை நின்ற பாதுகாப்பு தரப்பினரும் நீதி முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டியவர்களே. அதில் மாற்று கருத்து இல்லை. காலம் கடந்தேனும் நீதி நிலைநாட்டப்படல் வேண்டும். உண்மை முழு நாட்டுக்கும் தெரிய வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச 1988ஃ89 காலப்பகுதியில் மாத்தலை பிரதேசத்தில் இராணுவத்திற்கு தலைமை தாங்கிய போது அங்கு கொண்டு புதைக்கப்பட்டவர்களின் சமூக புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டது.

தெற்கில் மேலும் பல சமூக புதைகுழிகள் தொடர்பான அறிக்கைகள் 2023 ஆம் ஆண்டில் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இது தொடர்பான அறிக்கை பகிரங்கமாக வெளியிடப்பட்ட போதும் அது தொடர்பில் தற்போதைய தேசிய மக்கள் சக்தியான மக்கள் முன்னணி வாய் திறக்காமல் அமைதி காத்து தற்போது ரணில் மீது விசாரணை எனக் கூறுவது அரசியல் நாடகமாக அமையக்கூடாது.

ஊடகவியலாளர் திஸ்சநாயகத்தின் உதவியோடு 1988-89 காலப்பகுதியில் நிகழ்ந்த மனித உரிமை மீறல் தொடர்பான அறிக்கைகளை தூக்கிக்கொண்டு மஹிந்த ராஜபக்ஷ ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை நோக்கி ஓடியதை மறக்க முடியாது.

அதே மகிந்த திஸ்ச நாயகத்திற்கு 20 வருட தண்டனையை பெற்றுக் கொடுத்ததும் சர்வதேச தலையீட்டின் காரணமாக அவர் விடுதலை பெற்றதும் மறக்க முடியாது.

பட்டலந்த கொலைகளை காரணம் காட்டி ஆட்சியை கைப்பற்றிய பின்னர் இது தொடர்பில் சந்திரிகா பண்டார நாயக்கவும் மஹிந்த ராஜபக்ஷவும் அமைதி காத்தமை கொலை குற்றவாளிகளை பாதுகாத்ததாகவே கருதப்பட வேண்டும். அவர்களும் ரணிலுக்கு கொலை குற்றவாளிகளே, தண்டிக்கப்பட வேண்டியவர்களே.

சந்திரிக்கா பண்டாரநாயக்க, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்திய யுத்தம் அவர்களால் புரியப்பட்ட கொலைகள் பட்டலந்த விடயத்தை விசாரணைக்கு உட்படுத்தாததை மறைத்து விட்டது.

தெற்கு இனவாத யுத்தத்தில் மூழ்கி இருந்தது. இனவாதம் தெற்கின் கண்களை மறைத்து நீதியை புதைத்து விட்டது என்றும் கூறலாம்.

இவ்வாறு மறைத்தவர்களும் பட்டலந்தை கொலையாளிகளே. அல் ஜஸீரா ஊடகவியலாளர் கேள்விகளை கேட்கவில்லையேல் தற்போதும் நீதிக்கான குரல் எழுந்திருக்காது.

தமிழர்களை பொறுத் தவரையில் ரணிலுக்கு எதிரான விசாரணை எனக் கூறும் தேசிய மக்கள் சக்தியாகிய மக்கள் விடுதலை முன்னணி நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டியவர்கள்.

தண்டிக்கப்பட வேண்டியவர்கள் சந்திரிகாவையும் மகிந்தவையும் தமிழர்களுக்கு எதிரான யுத்தத்திற்கு பலவந்தமாக தள்ளி தமது முன்னணி உறுப்பினர்களையும் சாதாரண கிராமிய இளைஞர்களையும் இனவாதத்திற்குள் தள்ளி தமிழர்களை இனப் படுகொலை புரிந்த இவர்களும் தண்டனைக்குரியவர்களே.

தற்போதைய ஆட்சியாளர் ரணிலுக்கு எதிராக விசாரணை நடத்துவதாக கூறுவது போல் தங்கள் மனசாட்சியை தொட்டு தங்களுக்கு எதிராக விசாரணை நடத்தினால் மட்டுமே இவர்களின் கிளீன் சிறீலங்காவிற்கு நீதி கிட்டும் இல்லையேல் அதுவும் போலியே.

தற்போதைய ஆட்சியாளர் வடக்கு கிழக்கில் நிகழ்ந்த யுத்தம் தொடர்பாக உள்ளக விசாரணை என்பதும் சர்வதேசத்தின் எந்த தலையீட்டையும் ஏற்க மாட்டோம் என்று கூறுவதற்கும் காரணம் இவர்கள் மீதும் கொலை குற்றச்சாட்டுகள் விழும் என்பதன் காரணமாகவே.

கடந்த ஆட்சியாளர்களை போல பாதுகாப்பு படையினரை பாதுகாக்கும் நோக்கமேயாகும். சர்வதேச விசாரணைக்கு மறுப்பு தெரிவிப்பவர்களும் கொலை குற்றவாளிகளே.

இலங்கை வரலாற்றில் எல்லா காலப்பகுதிகளிலும் நிகழ்த்தப்பட்ட இன சுத்திகரிப்பு, இனப்படுகொலை, யுத்த குற்றங்கள் எல்லாவற்றுக்கும் இதய சுத்தியோடு விசாரணை நடத்தப்பட வேண்டும்.

அதற்கான தகுதி இலங்கைக்கு இல்லை என்பதே தமிழர்களின் கடந்த கால நிகழ்கால அனுபவமாகும். அதனாலேயே சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் யுத்த குற்றம் விசாரிக்கப்பட வேண்டும் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

அரசியல் நீதி கிடைக்க வேண்டும் என்று தமிழ் தொடர்ந்து கோரிக்கை விடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இது இன்று வரை செவிடன் காதில் ஊதிய சங்காகவே உள்ளது.

இதுவரை காலமும் பட்டலந்த வதைமுகாம் தொடர்பாக அமைதி காத்தவர்கள் எல்லாம் இன்று வாய் திறக்கிறார்கள் எனில் அதற்கு அல் ஜஸீரா சர்வதேச ஊடகமே காரணமாகும்.

அதைப் போன்று தமிழர்களுக்கு எதிரான இன படுகொலை, யுத்தக் குற்றங்கள் அரசியல் நீதி என அனைத்திற்கும் சர்வதேசத்தின் தலையீடு வேண்டும். அதனை மறுப்பவர்கள் குற்றவாளிகள், கொலையாளிகள், இனவாதிகள் என்பதை உண்மை என்றுள்ளது.



# மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக அன்னலிங்கம் பிரேமசங்கர் பதவியேற்பு

திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக ஜனாதிபதி நேற்று (செவ்வாய்க்கிழமை) அநுரகுமார திசாநாயக்க முன்னிலையில் உறுதியுரை எடுத்து பதவியேற்கிறார்.

கண்டி மேல் நீதிமன்ற நீதிபதி சுமுது பிரேமச்சந்திரா, கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்ற நீதிபதி கேபிரியந்த பெர்னாண்டோ மற்றும் திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் ஆகிய மூவருமே நேற்று பதவியேற்றனர்.

யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் நீதிவான், மாவட்ட நீதிபதி மற்றும் மேல் நீதிமன்ற நீதிபதியாக அன்னலிங்கம் பிரேமசங்கர் சுமார் 28 ஆண்டுகள் நீதிச் சேவையில் கடமையாற்றியுள்ளார்.

1967ஆம் ஆண்டு ஜனவரி 19 ஆம் திகதி யாழ்ப்பாணம், வடமராட்சி, துன்னாலையில் அன்னலிங்கம் (முன்னாள் அத்தியாவசிய சேவைகள் உதவி ஆணையாளர்) மகாலக்ஷ்மி தம்பதியினருக்கு மகனாக அன்னலிங்கம் பிரேமசங்கர் பிறந்தார்.

துன்னாலை அமெரிக்க மிசன் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்த மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் அன்னலிங்கம் பிரேமசங்கர், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மற்றும் கொழும்பு றோயல் கல்லூரியில் உயர் கல்வியைத் தொடர்ந்து சட்டத்துறையில் கல்வி கற்று சட்டத்தரணியானார்.

1998ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி நீதிச் சேவை ஆணைக்குழுவால் நீதித்துறை அலுவலராக நீதிபதி நியமனம் பெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் அன்னலிங்கம் பிரேமசங்கர், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பருத்தித்துறை, சாவக்கச்சேரி மற்றும் கிளிநொச்சி நீதிமன்றங்களில் ஒரே தடவையில் நீதிவானாகவும் (போர் இடம்பெற்ற காலப்பகுதியில்) மல்லாகம், சாவகச்சேரி மற்றும் யாழ்ப்பாணம் என யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அனைத்து நீதிவான் மற்றும் மாவட்ட நீதிமன்றங்களில் நீதிபதியாகக் கடமையாற்றியுள்ளார்.

சுமார் 14 ஆண்டுகள் நீதிவான் மற்றும் மாவட்ட நீதிமன்ற நீதிபதியாக பதவி வகித்த அன்னலிங்கம் பிரேமசங்கள் 2012ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி திருகோணமலை மேல் நீதிமன்ற ஆணையாளராக (மேல் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை நாடாளுமன்றால் அதிகரிக்க முன்னர்) பின்னர் 2013ஆம் ஆண்டு ஜூலை 01ஆம் திகதி தொடக்கம் 2014ஆம் ஆண்டு பெப்ரவரி 10ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற ஆணையாளராக பதவி வகித்ததுடன் 2014ஆம் ஆண்டு பெப்ரவரி 11ஆம் திகதி முதல் மேல் நீதிமன்ற நீதிபதியாக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டு யாழ்ப்பாணம், திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பு என மேல் நீதிமன்ற நீதிபதியாகவும் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதியாகவும் சுமார் 13 ஆண்டுகள் பதவி வகித்துள்ளார்.

இந்த நிலையில் 27 ஆண்டுகள் நீதிச் சேவையில் முதல் நிலை நீதிபதியாகத் தொடர்ந்த நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், தலைமை நீதியரசர் முறுது பெர்னாண்டோ தலைமையிலான நீதிச் சேவை ஆணைக்குழுவின் பரிந்துரையுடனும் சபாநாயகர் தலைமையிலான அரசமைப்புச்சபையின் ஒப்புதலுடனும் ஜனாதிபதியினால் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்படுகிறார்.

2000 ஆம் ஆண்டு பருத்தித்துறை, சாவகச்சேரி மற்றும் கிளிநொச்சி நீதிவானாக செயற்பட்ட காலத்தில் மிருசுவிலில் ஐந்து வயது சிறுவன் உட்பட எட்டுப்பேரை சுட்டு படுகொலை செய்த வழக்கின் விசாரணைகளை உரியவகையில் முன்னெடுத்தமைக்காக அந்த வழக்கின் தூக்குத் தண்டனை பெற்ற இராணுவச் சிப்பாயின் மேன்முறையீட்டை விசாரணை செய்து தூக்குத் தண்டனையை உறுதிசெய்த தீர்ப்பில் உயர் நீதிமன்ற அமர்வு நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கருக்கு பாராட்டை கோடிட்டுக் காட்டியிருந்தது.

# நோன்பு கால உலர் உணவு கிண்ணியாவில் வழங்கல்

(ஹலால்தீன்)

புனிதமிகு ரமழான் மாதத்தில் நோன்பு காலத்துக்கு தேவையான உலர் உணவு பொதிகள் நேற்று கிண்ணியாவில் வழங்கி வைக்கப்பட்டன.

அல்ஹாஜ் அப்துல் அஸீஸ் இந்த உலர் உணவுப் பொருள்களைத் தேர்ந்தெடுக்கப்பட்ட தேவை உடையவர்களுக்கு வழங்கி வைத்தார்.

முள்ளிப் பொத்தானை, புடைவைக்கட்டு முதலான கிராமங்களிலும் 200 குடும்பங்களுக்கும் கிண்ணியாவில் சூரங்கல் - சாந்தி நகர், வில்வெளி, பைசல் நகர் உள்ளிட்ட 250 குடும்பங்களுக்கான உலர் உணவு பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

சுமார் 4,000 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் தெரிவு செய்யப்பட்ட 100 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.

இந்த அனைத்து உதவிகளையும் எமக்கு செய்து மல்வானையைப் பிறப்பிடமாகவும் சிங்கப்பூரை வசிப்பிடமாகவும் கொண்ட கலாநிதி அல்ஹாஜ் ஜிப்ரினால் மக்களுக்காக வழங்கிவைக்கப்பட்டன.



காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை அர்ச்சுனா எம்.பிக்குக் கடும் கண்டனம்

## இம்ரான் எம்.பி குற்றச்சாட்டு

(முஹம்மது ஜிப்ரான்)

2025.03.08 ஆம் திகதி, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா தனது நாடாளுமன்ற உரையின் போது முஸ்லிம் தனியார் சட்டம் மற்றும் இஸ்லாமிய விழுமியங்கள் தொடர்பில் அறிவீனமாக கருத்து வெளியிட்டதை அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை வன்மையாக கண்டிக்கின்றது.

மார்க்கவிவகாரங்கள்மற்றும்அதன்சட்டதிட்டங்கள் குறித்து போதிய அறிவின்றி கருத்து வெளியிடுவது, சமூகங்களிடையே தேவையற்ற குழப்பங்களை உருவாக்கி, குறிப்பிட்ட நம்பிக்கைகளை பின்பற்றி வாழும் சமூகத்தின் மத உணர்வுகளை தூண்டும் நிலையை உருவாக்கக் கூடும்.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை, முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தில், மார்க்க அடிப்படைகளுக்கு முரணில்லாத வகையில் மாற்றங்களை கொண்டு வருவது தொடர்பாக அதனுடன் தொடர்புடைய அமைச்சுகள் மற்றும் அதிகாரிகளுடன் தொடர்ச்சியான ஒத்துழைப்புடன் செயல்பட்டு வருகிறது.

இவ்வாறான மத சார்ந்த முக்கியமான விடயங்கள் தொடர்பாக பொது மன்றங்களில் கருத்து வெளியிடும் போது, மிகுந்த நாகரிகத்தோடும், தெளிவோடும், பிறரது உணர்வுகளுக்கு மதிப்பளித்தும் நடந்து கொள்வதே மிகவும் சிறந்ததாகும்.

வைத்தியர் அர்ச்சுனா உட்பட அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் மதங்கள் பற்றிய முக்கியமான விடயங்களில் தேவைப்படுமாயின் அவற்றை பேசுமுன், அந்தந்த மதங்களின் உயர்பீடங்களிடம் தெளிவு பெற்ற பின்னரே கருத்து தெரிவிப்பது முறையாகும்.

அவ்வாறே இஸ்லாத்தை பற்றிய தெளிவுகள் தேவைப்படுமாயின், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையுடன் தொடர்பு கொண்டு, முறையாக தெளிவு பெற்றுக் கொள்ளுமாறு வினயமாக கேட்டுக் கொள்கின்றோம். - என்றுள்ளது.








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.03.2025இல் வெளியிடப்பெற்றது